பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 19 வியாழக்கிழமை 01.04.2021 கதிர் 15

## துக்க நாள் அனுஷ்டித்து ஆயரை அஞ்சலியுங்கள்

### சுரேஷ் வேண்டுகோள்



வடக்கு, கிழக்கு தமிழர்களுக்காக உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் அயராது குரல் கொடுத்த முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்

☞2





மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அருட்திரு இராயப்பு ஜோசப்பின் உடல் அஞ்சலிக்காக யாழ். ஆயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

# தமிழினத்தின் சாட்சியம் ஓய்ந்தது!

### இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இழப்பால் உலகத் தமிழர்கள் சோகத்தில்

**தமிழ் மக்களின் உரிமைக்காக - விடுதலைக்காக அயராது குரல் கொடுத்த - தமிழினத்தின் மிகப்பெரிய சாட்சியாக இருந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அருட்திரு கலாநிதி இராயப்பு ஜோசப் காலமானார்.**

**நோய்வாய்ப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் மட வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த அவர், தனது 81ஆவது வயதில் இன்று காலை 06.30 மணியளவில் காலமானார் என்று மன்னார் ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது.**

☞2



## தமிழருக்குப் பேரிழப்பு!

### இரங்கல் செய்தியில் சம்பந்தன்



மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அருட்திரு இராயப்பு ஜோசப்பின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆயர் இராயப்பு ஜோசப், தமிழ் மக்களின்

☞2

## நீதிக்காக ஓங்கி ஒலித்த குரல்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரங்கல்



முன்னாள் மன்னார் மறைமாவட்ட பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். ஈழத்தமிழரின் உரிமைக்கான போராட்டக் காலத்திலும், போர் நிறைவு பெற்றதன் பின்னரும், ஒடுக்கப்படும் ஈழத்தமிழ் மக்களின் பலமான குரலாகச் செயற்பட்ட ஆயர் இராயப்பு

☞2

## ஒரு மகானை இழந்து நிற்கின்றது தமிழினம்

### விக்கி அனுதாபம்



கத்தோலிக்க மக்களின் புனித வாரம் அனுஷ்டிக்கப்படும் இந்த வாரத்தில் மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இறையடி சேர்ந்தமை

☞2

## தமிழினப் படுகொலையை அரங்கேற்றிய அரசை தோலுரித்துக் காட்டிய மாமனிதர்!

### அஞ்சலி செலுத்திய பின் சிறிதரன் தெரிவிப்பு



இறுதிப்போரில் தமிழினப் படுகொலையை அரங்கேற்றிய அரசை சர்வதேசத்துக்குத் தோலுரித்துக்காட்டிய மாமனிதரே இராயப்பு ஜோசப் ஆண்டகை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

மறைந்த மன்னார்

☞2

## நசுக்கி ஒடுக்கப்பட்டுக் கொல்லப்பட்ட தமிழருக்காக பகிரங்கமாகச் சாட்சியமளித்தவரே ஆயர் ஜோசப்

### ஓய்வெடுத்துவிட்டார் என சுமந்திரன் கவலை



அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக அடக்கப்பட்ட நேரத்திலும் ஓங்கி ஒலித்த குரல் ஒன்று ஓய்வெடுத்து விட்டது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவையொட்டி அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மகானை இழந்து ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் இறை வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. ஒரு மக்கள் சேவகரை, மகானை தமிழ் மக்கள் இழந்து நிற்கின்றோம்.

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இன்று யாழ் திருச்சிலுவை கன்னியர்மட வைத்தியசாலையில் இயற்கை எய்திய செய்தி எம்மை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரின் ஆத்மா இறைவனடி சேர்ந்து சாந்தி பெற நாம் யாவரும் யாசிக்கின்றோம்.

கத்தோலிக்க மக்களின் புனித வாரம் அனுஷ்டிக்கப்படும் இந்த வாரத்தில் அவர் இறையடி சேர்ந்தமை அவரின் இறை வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

ஆயர் பணியில் 25 வருடங்கள் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வுபெற்றபோதும் அவர் வெறுமனே இறைபணியுடன் மட்டும் நின்றுவிடாது மக்கள் பணியிலும் விசேடமாக தமிழ் மக்கள் சார்பான நலன்கள் தொடர்பிலும் அதீத அக்கறை காட்டியதுடன் அனைவரும் இந்த நாட்டின் குடிமக்களாக சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய வகையில் நேரிய வழிகாட்டியாக வாழ்ந்து எம்மையெல்லாம் அரவணைத்துச் சென்ற ஆண்டகை ஆவார்.

அவரின் 75 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் நானும் பங்கேற்றிருந்தேன். அவர் புகழின், பணியின் உச்சநாளாக அன்றைய தினம் அமைந்திருந்தது. அவரின் முகத்தில் ஒருவித அமைதி, அன்பு, இறைமை போன்றவற்றை நான் கண்டேன். சில நாள்களுக்குள்ளேயே அவரின் தேகநிலை மாற்றமடையப் போகின்றது என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை.

அதன்பின்னர் அவரின் தேகநிலை மோசமடைந்து அவர் திடகாத்திரத்தை இழந்து வாழ்ந்தார். மன்னார் செல்லும்போதெல்லாம் ஆண்டகையைத் தரிசிக்காது திரும்பமாட்டேன். பேச்சுத்திறன் குறைந்திருந்த போதும் அவர் எம்மை அடையாளம் கண்டுகொண்டார்.

ஒரு மக்கள் சேவகரை, மகானை தமிழ் மக்கள் இழந்து நிற்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக! - என்றுள்ளது.

## நசுக்கி ஒடுக்கப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை போரின்போதும் போருக்குப் பின்பும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓங்கி ஒலித்த ஒரு குரல். போரில் நசுக்கி ஒடுக்கப்பட்டு கொல்லப்பட்ட அல்லது காணாமல்போனோரின் எண்ணிக்கை தொடர்பில் கணக்கிட்டுச் சர்வதேசத்துக்கும் ஆணைக் குழுக்களின் முன்பும் பகிரங்கமாகவே சாட்சியம் அளித்த ஒருவர். எமது மக்களின் இன்னல்களுடன் அனைத்து வழிகளிலும் பாடுபட்டதோடு அவை தொடர்பில் எமக்கு காலத்துக்குக் காலம் உரிய ஆலோசனைகளையும் வழங்கி வந்த ஒருவரை இழந்து நிற்கின்றோம்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு சட்ட ஆலோசகராக நான் செயற்பட்ட காலத்தில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையுடனான உறவு மேலும் அதிகரித்தது. என்றுமே மக்களின் விடயங்களிலேயே அதிக கரிசனை கொண்டவராகக் காணப்பட்ட ஆயர், நோய்வாய்ப்பட்ட பின்பும் தனது பங்களிப்பு இருக்க வேண்டும் என இரவு பகலாக முயற்சித்தார். அதனால் இன்று அவரை இந்த முயற்சியில் இருந்து நிரந்தரமாக விடுவித்துள்ளது.

இவ்வாறு தனது இன மக்களுக்காக ஓங்கி குரல் கொடுத்தது மட்டுமன்றி அதற்காகவே வாழ்நாளின் பெரும் பங்கை அர்ப்பணித்துச் செயற்பட்டவரை இழந்து நிற்பது ஒரு ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஆற்றுப்படுத்த முடியாத துயரமுமாகும். இதனால் ஆயரின் பிரிவால் துயருற்ற அனைவருக்கும் விசேடமாக கத்தோலிக்க மக்களுக்கும் எனது இரங்கலைக் காணிக்கையாக்குகின்றேன் - என்றுள்ளது.

## நீதிக்காக ஓங்கி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோசப் ஆண்டகையின் மறைவு கத்தோலிக்க திருச்சபைக்கும், தமிழ்த் தேசிய மக்களுக்கும் ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்பாகும். தமிழ் மக்களுக்கான நீதிக்காக ஓங்கி ஒலித்த குரல் இன்று அமைதியில் உறங்குகின்றது. தமிழ் மக்களின் உணர்வுகளுடன் கலந்து, உடலால் அமரத்துவம் அடைந்த ஆண்டகையின் ஆன்மா நித்திய அமைதி அடைவதாக!

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசு தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தை இன அழிப்புப் போர் மூலம் 2009 மே 18 இல் முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக்க முயன்றபோது, தமிழ்த் தேசத்தில் நடைபெற்ற இன அழிப்புக்கு நீதியைக் கோரி, சர்வதேச பொறுப்புக்கூறலை எந்தவித விட்டுக்கொடுப்புமின்றி வலியுறுத்தி, தமிழ் சிவில் சமூக அமையத்தினூடாக ஆண்டகை தலைமையை வழங்கியிருந்தார்.

குருத்துவத்தின் புனிதத்தையும், மேன்மையையும் தாங்கி, ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் உண்மையானதும் நீதியானதுமான பொறுப்புக்கூறலுக்காக ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

ஆண்டகையின் வெற்றிடத்தை நிரப்புவது என்பது கடினமான பணியாகும். ஈழத்து திருச்சபையின் பணியாளர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை ஆண்டகையின் வாழ்வும் குருத்துவமும் எடுத்துக்காட்டியுள்ளது.

இயேசு கிறிஸ்து பணிக்குருத்துவத்தை நிறுவியதை நினைவுகூரும், புனித வியாழன் நாளாகிய இன்று ஆண்டகையும் தனது தலைமைக் குருவின் திருப்பாதம் நாடிச்சென்று அமைதியில் உறங்குகின்றார்.

ஆண்டகையின் பேரிழப்பால் துயருறும் கத்தோலிக்க திருச்சபையினதும், அவரது குடும்பத்தினரதும் துயரில் ஈழத் தமிழ் மக்களுடன் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாமும் பங்குகொள்கின்றோம்.

இறைவனின் உன்னத திருப்பாதம் நாடிச்சென்ற ஆண்டகை, இறைவனின் அருகில் இருந்து, விடுதலைக்காக ஏங்கும் தமிழ் தேச இனத்துக்காகப் பரிந்து பேசி, எமக்கானசக்தியைவழங்குபவராக தொடர்ந்தும் இருப்பார் என்னும் நம்பிக்கை எமக்குண்டு.

இன்றிலிருந்து ஆண்டகையின் திருவுடல் அடக்கம் செய்யப்படும் வரை தமிழ்த் தேசத்தில் துக்க நாளாக அனுஷ்டிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## தமிழுருக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைக்குரலாகப் பலதசாப்தங்களாகத் திகழ்ந்தவர்.

மக்களோடு மிகவும் நெருங்கிப் பழகிய ஆயர், தமிழ் மக்களின் இக்கட்டான அனைத்துக் கட்டங்களிலும் தாம் நேசித்த மக்களுக்காக முன்னின்று போராடிய ஒருவராவார்.

இன, மத மொழிகளுக்கு அப்பால் சாதாரண மக்களின் உரிமைகளுக்காக எவ்வித தயக்கமும் பாரபட்சமும் இல்லாமல் அயராது பணியாற்றிய ஒரு தலைவரை இன்று நாம் இழந்துள்ளோம்.

மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய மறைந்த ஆண்டகை இராயப்பு ஜோசப்பின் பிரயத்தனங்கள் மெய்ப்பட வேண்டும் என நாம் இறைவனைப் பிரார்த்திப்பதோடு, ஆண்டகையின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது உறவினர்கள், திருச்சபை மக்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அன்னாரது ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக! - என்றுள்ளது.

## தமிழினத்தின் சாட்சியம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1940ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி யாழ். நெடுந்தீவில் பிறந்த இராயப்பு ஜோசப், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

கண்டி தேசிய குருமடம், திருச்சி புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று 1967ஆம் ஆண்டில் யாழ். மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இராயப்பு ஜோசப், 1992 ஆம் ஆண்டில் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்றார்.

தொடர்ச்சியாக 25 வருடங்களாக மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிய அவர், போர்க்காலத்தில் மக்களுக்குப் பெரும் சேவைகளை ஆற்றினார்.

அத்துடன் தமிழ் மக்களின் உரிமைக்காக அவர் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்தார். இலங்கை அரசாலும், அதன் படைகளாலும் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் எதிராகப் போராடினார். தமிழ்த் தேசியத்தின்பால் பற்றுறுதி கொண்ட அவர், தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஐ.நாவிடம் நீதியைக் கோரி நின்றார். இலங்கை மீது சர்வதேச விசாரணைக்குத் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்தார்.

ஈழத்தமிழர் வரலாற்றில் அயராது உழைத்த இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இழப்பால் உலகத் தமிழர்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

அவரின் உடல் அஞ்சலிக்காக யாழ். ஆயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அங்கு யாழ். மறைமாவட்ட ஆயர், குரு முதல்வர் ஆகியோர் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மதகுருமார், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மறைந்த ஆயருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நாளை மதியம் மன்னாருக்கு அவரது உடல் எடுத்துச் செல்லப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை அவரது இறுதித் திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

## தமிழினப் படுகொலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடலுக்கு இன்று நேரில் அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசிய மண்ணிலே தமிழ் மக்களுடைய உரிமைக்காகவும் அவர்களுடைய வாழ்வுக்காகவும் ஒரு நீண்ட பெரும் பாதையிலே தன்னுடைய ஆழமான பங்கை ஆத்மார்த்தமாகவும் உணர்வாகவும் வெளிப்படுத்திய ஆன்மா ஒன்று மீளாத் துயிலில் உறங்கிக் கொண்டிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் மீதும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதும் அதிகமான பற்றுக்கொண்ட ஒரு மனிதனாக நின்று தன்னை அர்ப்பணித்து இன்று உறக்கம் கொள்கின்ற அவரை நினைக்கும்போது நெஞ்சம் துடிக்கின்றது .

இப்படியான ஓர் ஆயர் இனி கிடைப்பாரா என்பது சந்தேகமே. தமிழ் மக்களுடைய உரிமைக்காக - வாழ்வுக்காக - வாழ்வாதாரத்துக்காக - இருப்புக்காக குரல் கொடுத்த ஓர் ஒப்பற்ற மனிதரே அவர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சென்று மிகத் துணிச்சலோடு ஆதாரத்தோடு ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இறுதிப்போரில் காணாமல் ஆக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியை வெளிப்படையாகத் துணிச்சலுடன் சொன்ன ஒரு மனிதர்.

நெடுந்தீவில் பிறந்திருந்தாலும் வடக்கு, கிழக்கு தாயகம் எங்கும் வாழும் ஒவ்வொரு தமிழர்கள் மீதும் தமிழ் மண் மீதும் உறுதியான ஒரு பற்றுக்கொண்ட ஒரு மனிதனை தமிழ் மக்கள் இழந்து தவிக்கிறார்கள் - என்றார்.

## துக்க நாள் அனுஷ்டித்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டகையின் மறைவு எமது இனத்துக்கு ஏற்க முடியாத இழப்பாகும். இன்றிலிருந்து ஆண்டகையின் திருவுடல் அடக்கம் செய்யப்படும் நாள் (திங்கள்) வரை வடக்கு, கிழக்கில் துக்க நாள்கள் அனுஷ்டிக்குமாறு அனைத்துத் தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதித் திருப்பலி இடம்பெறும் நாளான எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு, கிழக்கு எங்கும் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் கறுப்புக் கொடிகளோடு அவருடைய உருவப்படங்களை தாங்கிய நிலையில் அஞ்சலி செலுத்துமாறும் நாம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மைத்திரி, ரணில் அழிச்சாட்டியம்

வெறும் கை முழம் போட்டுப் பயனில்லை என்பது கண்கூடு. சரம் இருந்தால்தான் முழம் போட முடியும்.

அது போலத்தான் அரசியலிலும் மக்கள் செல்வாக்கும் ஆதரவும் இல்லாமல், வெறுமனே வாய்ப்பந்தல் போட்டுப் பிரயோசனமில்லை.

சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும். வெறும் சட்டியை எப்படிப் பிறாண்டினாலும் அகப்பையில் ஏதும் வராது.

அரசியல் கட்சிகள் மக்கள் செல்வாக்கையும், ஆதரவையும் பெறக் கூடிய காரியங்களை ஆற்றி, தம்மை முன்னிலைப்படுத்தாமல் ஆரவார அறிவிப்புகள், பிரகடனங்களை வெளியிடுவதில் அர்த்தமில்லை.

அதுவும் ஒரு காலத்தில் மலை போல எழுந்து நின்ற கட்சி இன்று அதலபாதாளத்தில் விழுந்து கிடக்கையில் அதைத் தூக்கி நிறுத்துவதற்கு வாயச் சவடால் பேச்சுகளும் கண்ணாமூச்சி விளையாட்டு அறிவிப்புகளும் உதவப் போவதில்லை.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போல சுருண்டு போய்க் கிடக்கின்றது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. அதன் மலைகள் எல்லாம் அக்கட்சியை விட்டு உதறிக் கொண்டு வெளியேறி சிறிலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கி, அதைக் குறுகிய காலத்தில் ஆட்சிப் பீடமேற்றி மாதங்கள் கடந்து விட்டன.

கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்து விட்டு இப்போதுதான் எழுந்து வந்தவர் போல மீண்டும் சு.கவை ஆட்சி அதிகாரத்தில் ஏற்றுவேன் என்று திடீரென முழித்து, முழங்கியிருக்கின்றார் அதன் தலைவரான முன்னாள் அதிபர் மைத்திரிபால சிறிசேன.

2015 இல் அக்கட்சியின் தலைமைப் பதவியை மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து மைத்திரிபால சிறிசேன பிடுங்கி எடுத்த காலத்தில் இருந்தே அதன் சரிவு நேரம் – அந்திம காலம் – ஆரம்பமாகி விட்டது என்றே கூறலாம்.

அந்தச் சரிவிலிருந்து அந்தக் கட்சி மீளவேயில்லை. இனி மீளும் அறிகுறியும் தென்படவேயில்லை. அது இன்னும் இன்னும் சிதைந்து, உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாக உருக்குலைந்து விடும் என்பதுதான் அவதானிகளின் கருத்து.

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்' என்ற மாதிரி, நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து நிற்கும் திராணியற்ற தமது சுதந்திரக் கட்சியை விரைவில் அரசு அமைக்கும் கட்சியாக உயர்த்திக் காட்டுவோம் என்று சூளுரைத்திருக்கின்றார் மைத்திரியார்.

உண்மையில் அந்தக் கருத்தில்தான் அவர் இவ்விடயத்தைக் கூறியிருப்பார் எனில், நிஜவுலகில் அல்ல, ஏதோ ஒரு கனவுலகில் அவர் சஞ்சரிக்கின்றார் என்றுதான் அர்த்தம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வைத்துக் கொண்டே தமது கட்சி மூலம் அரசை ஸ்தாபிக்கச் செய்ய இயலாதவர் –

குறைந்தபட்சம் கண்ணுக்கு முன்னால் தமது கட்சி சிதைந்தழிவதைக் கூடத் தடுக்க இயலாது, கையாலாகாதவராகப் பார்த்து இருந்தவர் –

தமது சொந்தச் செல்வாக்கே பொலன்னறுவை மாவட்டத்துக்குள் குறுகிப் போன நிலையில் அதற்குள் சுருண்டு கிடப்பவர் –

முன்னாள் ஜனாதிபதி என்ற முறையில் கூடத் தேசிய அரசியலிலேயே செல்வாக்குச் செலுத்தும் வகையறியாதவர் –

– இப்படி மீண்டும் சு.க. ஆட்சியே எனது இலக்கு என்று சபதம் செய்வதில் அர்த்தம் ஏதுமில்லை.

கவர்ச்சிகரமான தலைவர்களுக்குரிய பண்பியல்பை – மக்கள் அவதானிப்பை – மைத்திரிபால இழந்து பல ஆண்டுகளாகி விட்டன.

இலங்கையைப் பொறுத்தவரை ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகளில் அதிகம் தீமை செய்யாதவராக, மனித உரிமை மீறல்களில் ஈடுபாடு காட்டாதவராக, உள்ளதற்குள் வள்ளிசான நல்ல ஜனாதிபதியாக அவர் இருந்திருக்கலாம். ஆனால் அவை எல்லாம் மக்கள் செல்வாக்கைத் தேடித் தரும் அரசியல் கவர்ச்சியாகி விடா.

கூலிக்கு மாரடிப்பது போலவோ, ஒப்புக்குச் சப்பாணி மாதிரியோ, அவர் கட்சியின் தலைவராக இருந்து விட்டுப் போகலாம். அதற்காக மீண்டும் கட்சியை ஆட்சியதிகாரத்துக்குக் கொண்டு வருவேன் என்றெல்லாம் அவர் பீற்றுவது அர்த்தமற்றது.

இதற்கு முன்னர் மாறி மாறி ஆட்சி அதிகாரத்துக்கு வந்த அவரது சு.கவும் சரி, ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கட்சியும் சரி, அதலபாதாள நிலையில் இருந்து மீண்டெழுவதாயின் அதற்கு அதிசயம் ஏதும் நேர வேண்டும்.

அப்படி அதிசயம் நேர்வதற்கு முதல் கைங்கரியம் அக்கட்சிகள் இரண்டிலும் தலைவர்களான மைத்திரியும், ரணிலும் நந்தி விலகியமை போல விலகி இடம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் கட்சியின் மூலஸ்தானத்துக்கு துடிப்புள்ள, கவர்ச்சியுள்ள, மக்கள் செல்வாக்குள்ள புதிய தலைமை ஒன்று வந்து அமரலாம். அப்படி அமர்ந்தால் மட்டுமே அந்த இரு கட்சிகளுமே புத்துயிர்ப்பு – புத்தெழுச்சி – பெற வாய்ப்புக் கிட்டும்.

நல்லாட்சி அரசின் தலைவர்களான மைத்திரியும், ரணிலும் தத்தமது கட்சிகளின் தலைமைப் பதவிகளைக் கட்டிப் பிடித்து அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டு இருக்கும் வரை அக்கட்சிகளுக்கு மீட்சி என்பதே இல்லை. அதுதான் நிஜ நிலைமை.

# அரசின் பொறுப்பு மக்களை அழிப்பதல்ல அவர்களை உயிருடன் வைத்திருப்பதாகும்

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



அரசாங்கத்தின் பொறுப்பு மக்களை அழிப்பதல்ல. அவர்களைப் பாதுகாப்பதாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு –

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணெய்யை இறக்குமதியை தேசிய பாதுகாப்புக்கு ஒரு பிரச்சினையான காரணியாகவே நாம் பார்க்கின்றோம்.

இன்று, இந்த அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள், பயங்கரவாதத்தை விட தேசியப் பாதுகாப்புக்கு மிகவும் சிக்கலானவையாகக் காணப்படுகின்றது.

மேலும் நாட்டினதும் மக்களினதும் தேசிய பாதுகாப்பை அழிக்கும் அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் மாறி வருகின்றது.

அரசாங்கங்களின் பொறுப்பு மக்களை அழிப்பது அல்ல, அவர்களை உயிருடன் வைத்திருப்பது என்பதை நான் அரசாங்கத்துக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அத்துடன் புற்றுநோய் ஏற்படக்கூடிய தேங்காய் எண்ணெய் மோசடியில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தும் வரை நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தற்போது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெரிய அளவிலான கூட்டங்களுக்கு புத்தாண்டில் அனுமதி இல்லை

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தெரிவிப்பு

புத்தாண்டு காலப்பகுதியில் பெரிய அளவிலான கூட்டங்களுக்கு அனுமதி இல்லை என கொரோனா கட்டுப்பட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அத்தோடு கொரோனா பரவுவதைத் தடுக்க தற்போதுள்ள சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்குமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், பண்டிகைக் காலத்துக்குப் பின்னர் வைரஸ் பரவுவதற்கான ஆபத்து காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உலகின் சில பகுதிகளில் மூன்றாவது அலை பதிவாகியுள்ளதாகவும், குறிப்பாக இந்தியாவில் நோயாளிகளின் எண்ணிக்கை 62 வீதம்



அதிகரித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, தற்போதுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் என்றும் புதிய கட்டுப்பாடுகளை விதிக்க வாய்ப்பில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

# ஒருகோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் இருவர் கைது

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுவரித் திணைக்களத்தினரால் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

# திடக்கழிவு மேலாண்மை தொடர்பான நிபுணர்குழு அறிக்கை ஜனாதிபதியிடம்



திடக்கழிவு மேலாண்மை தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கை நேற்று புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை என்பது உலகின் பல நாடுகளுக்கும், இலங்கைக்கும் ஒரு பெரிய பிரச்சினையாகும். ஒழுங்காக நிர்வகிக்கப்படும் திடக்கழிவுகள் சுற்றுச்சூழல் மற்றும் நீரை மாசுபடுத்துதல் மற்றும் மண்ணில் பல்வேறு இரசாயனங்கள் குவிதல் போன்ற பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

கழிவு மேலாண்மை தொடர்பான சிக்கல்களைக் கண்டறிந்து தீர்வுகளை முன்வைக்க ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் கடந்த ஜூலை மாதம் 14 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. பொறியியலாளர் ரோஹன் செனவிரத்ன அதன் தலைவராக இருந்தார்.

இந்நிலையில் இந்தக் குழுவின் அறிக்கையை ரோஹன் செனவிரத்ன நேற்று ஜனாதிபதியிடம் கையளித்தார். நிபுணர் குழுவின் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாகப் பின்தொடர்வதன் முக்கியத்துவம் விரிவாக விவாதிக்கப்பட்டது. ஜனாதிபதி, கழிவு முகாமைத்துவத்தில் வெளிப்புற சுற்றுச்சூழல் காரணிகள் குறித்த அக்கறை இல்லாததே போராட்டங்களுக்கு காரணம் என்றும், நுளம்புகள் மற்றும் நாற்றங்களைத் தடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

அமைச்சர் டலஸ் அலகப்பெரும, காமினி லொக்குகெ, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் துமிந்தா திஸாநாயக்க, ரோஸன் ரண சிங்க, ஜனாதிபதி செயலாளர் டாக்டர் பி.பி. ஜெய சுந்தர, அரசு அதிகாரிகள் மற்றும் நிபுணர் குழு உறுப்பினர்கள் ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு





# ரஜினிக்கு தாதா சாகேப் பால்கே விருது: தேர்தல் சமயத்தில் மத்திய அரசு அறிவிப்பு

திரைத்துறையில் சாதனை படைத்ததற்காக நடிகர் ரஜினிகாந்துக்கு 'தாதா சாகேப் பால்கே' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தாதாசாகெப் பால்கே இந்திய திரைப்படத் துறையில் முதன்முதலில் 108 ஆண்டுகளுக்கு முன்பு ராஜா ஹரிச்சந்திரா என்ற திரைப்படத்தை தயாரித்தார். அவர் பெயரில் சிறந்த திரைப்பட சாதனையாளர்களுக்கு சாகேப் பால்கே விருது வழங்கப்படுகிறது.

இந்திய திரைத்துறையில் சிறந்த பங்களிப்பை அளித்ததற்காக நடிகர் ரஜினிகாந்திற்கு 51 ஆவது தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்படுவதாக மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தெரிவித்துள்ளார்.

மேலும் மோகன்லால், சங்கர் மகாதேவன், ஆஷா போஸ்லே, விஸ்வஜித் சாட்டர்ஜி, சுபாஷ் கைய் ஆகிய ஐந்து பேர் கொண்ட ஜூரி உறுப்பினர்கள் ரஜினிகாந்தை தேர்வு செய்திருப்பதாகவும், ரஜினிகாந்தின் 50 ஆண்டுகால கலை சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்படுவதாக பிரகாஷ் ஜவடேகர் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தேர்தல் நடைபெறும் சமயத்தில் இந்த விருது அறிவிக்கப்பட்டிருப்பதாக செய்தியாளர்கள் கேட்டபோது, ரஜினிகாந்த் திரையுலகில் சிறந்த சேவையை செய்து உள்ளார். இது அவருடைய திரைப்பட சாதனைக்கு, சேவைக்கு கொடுக்கப்பட்ட விருது. தமிழக தேர்தலுக்கும் ரஜினியின் விருதுக்கும் தொடர்பில்லை. இதை ஒப்பிட்டுப் பேசுவது தவறு என்று ஜவடேகர் தெரிவித்தார்.

இந்த விருது முன்பு தமிழ் திரை உலகில் பிரபலமான இயக்குநரும், தயாரிப்பாளருமான எல்.வி.பிரசாத், நாகிரெட்டி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இயக்குநர் பாலச்சந்தர், அமிதாப் பச்சன், வினோத் கண்ணா, லதா மங்கேஷ்கர், கன்னட நடிகர் ராஜ்குமார், கேரள இயக்குநர் ஆடூர் கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு ஏற்கனவே இந்த விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலைவனுக்கு விருது அறிவித்ததில் மகிழ்ச்சி: பிரதமர் மோடி வாழ்த்து

'தாதாசாகேப் பால்கே' விருது அறிவிக்கப்பட்டுள்ள நடிகர் ரஜினிகாந்தை 'தலைவா' எனக் குறிப்பிட்டு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்தின் 50 ஆண்டுகால கலை சேவையைப் பாராட்டி அவருக்கு இந்த ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருதை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக டுவிட்டரில் பிரதமர் மோடி பதிவிட்டுள்ளதாவது, பல தலைமுறைகளாக பிரபலமானவர், பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து அன்பான ஆளுமை கொண்டவர் நடிகர் ரஜினிகாந்த்.

'தலைவா' ரஜினிகாந்திற்கு தாதாசாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு எனது வாழ்த்துகள் எனத் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



# ஆறு மாதங்களுக்குப் பிறகு திறக்கப்பட்டது தாஜ்மஹால் காதல் சின்னத்தின் கதவுகள்

கடந்த ஆறு மாதகாலமாக கொரோனா அச்சத்தால் மூடப்பட்ட உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் மீண்டும் கடந்த திங்கட்கிழமை முதல் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது.



தினசரி அதிகபட்சமாக 5 ஆயிரம் பேர் அனுமதியளிக்கப்படுவார்கள். பார்வையாளர்களை இரு வரிசைகளாக அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் கொரோனா பீதி காரணமாக கூட்டம் குறைவாகவே காணப்படுகிறது. முதல் நாளில் ஒன்லைன் மூலம் 160 பேர் மட்டுமே முன்பதிவு செய்துள்ளனர். பிரதான முகப்பில் நுழைய இருநூறு ரூபா கட்டணம் விதிக்கப்பட்டதும் கூட்டம் குறைவாக இருப்பதற்கு ஒரு காரணமாகக் கருதப்படுகிறது.

ஆறுமாதங்களாக வாயில்கள் அடைக்கப்பட்டிருந்தாலும் முறையாக பராமரிப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தொல்லியல் துறையினர் தெரிவித்துள்ளனர்

# 6 மாத காலத்தில் முதல் தடவையாக புதிய பாதிப்பு 72,000 ஐ தாண்டியது

இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை வேகமாக பரவி வருகிறது. கடந்த சில தினங்களாக புதிய பாதிப்புகள் தொடர்ந்து அதிகரித்துவருகின்றன. இதனால் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் கொரோனா தடுப்பு விதிமுறைகளை பின்பற்றும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்தியாவில் கொரோனா பாதிப்பு நிலைவரம் தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இன்று காலை அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன்படி, இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1 கோடி 22 லட்சத்து 21 ஆயிரத்து 665 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 72,330 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு பிறகு தினசரி பாதிப்பு உச்சத்தை அடைந்துள்ளது.

நேற்று ஒரே நாளில் 459 பேர் கொரோனாவுக்கு பலியாகி உள்ளனர். இதன்மூலம் பலிஎண்ணிக்கை 1,62,927 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 1 கோடி 14 லட்சத்து 74 ஆயிரத்து 683 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று மட்டும் 40 ஆயிரத்து 382 பேர் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். நாடு முழுவதும் பல்வேறு மருத்துவமனைகளில் 5 லட்சத்து 84 ஆயிரத்து 55 பேர் சிகிச்சையில் உள்ளனர். நாடு முழுவதும் நேற்று வரை 6 கோடி 51 லட்சத்து 17 ஆயிரத்து 896 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

# 45 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பம்

45 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசி போடும் திட்டம் நாடு முழுவதும் தொடங்கியது.

இந்தியாவில் கொரோனா தடுப்பூசி போடும் திட்டம் ஜனவரி 16 ஆம் திகதி தொடங்கியது. உலகின் மிகப்பெரிய தடுப்பூசி திட்டம் என குறிப்பிடப்படும் இந்த திட்டத்தின் மூலம் ஜூலைக்குள் 30 கோடி பேருக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது. முன்களப் பணியாளர்களைத் தொடர்ந்து 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

மார்ச் 1 ஆம் திகதி தொடங்கிய இரண்டாம் கட்டத்தில், வேறு பிற நோய்கள் உள்ள 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி போடும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. நாடு தழுவிய அளவில் இதுவரை 6 கோடியே 43 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தற்போது 3ஆம் கட்டத்தில் நுழைந்துள்ள தடுப்பூசி திட்டத்தில் 45 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடப்படுகிறது.

சீரம் நிறுவனம் தயாரிக்கும் கொவிஷீல்டு, பாரத் பயோடெக் தயாரிக்கும் கொவேக்ஸின் ஆகிய தடுப்பூசிகள் போடப்படுகின்றன. தடுப்பூசி போட்டுக் கொள்வது கட்டாயம் அல்ல, விருப்பத்தின் பேரில் போட்டுக் கொள்ளலாம். கோவின் இணையதளம் அல்லது ஆரோக்கிய சேது செயலி மூலம் தடுப்பூசி போடுவதற்கு பதிவு செய்து கொள்ள முடியும்.

# தேசிய ஜனநாயக கூட்டணியை ஆதரித்து புதுச்சேரியில் அமைச்சர் அமித்ஷா பிரச்சாரம்

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கட்சிசார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேரணியாக சென்று வாக்கு சேகரித்தார்.

லாஸ்பேட்டை, காலாப்பட்டு, காமராஜ் நகர், மண்ணாடிப்பட்டு ஆகிய தொகுதிகளில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர்களுடன் பேரணியாக சென்ற அமைச்சர் அமித்ஷாவுக்கு பா.ஜ.கவினர் மலர்தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர். லாஸ்பேட்டையில் தொடங்கி கிழக்கு கடற்கரை சாலையில் பேரணி நிறைவடைந்தது.

முன்னதாக, கருவடிகுப்பம் சித்தானந்தா கோயிலில் சுவாமி தரிசனம் செய்த அமித்ஷா, லாஸ்பேட்டையில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூயஸ் கால்வாய்:
# கப்பல் தரைதட்டிய பகுதியில் ஆய்வு



எகிப்தின் சூயஸ் கால்வாயில் பிரம்மாண்டக் கப்பல் தரைதட்டியதற்கான காரணம் குறித்து நிபுணர்கள் அந்தப் பகுதியில் ஆய்வைத் தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து அதிகாரிகள் புதன்கிழமை கூறியதாவது:

எவர் கிவன் கப்பல் எந்தக் காரணத்தால் மணலில் சிக்கியது என்பது குறித்த ஆய்வு செய்வதற்காக அந்தக் கப்பல் தரை தட்டிய பகுதியில் நீருக்குள் மூழ்கி நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது கிரேட் பிட்டா ஏரியில் நங்கூரம் பாய்சப்பட்டுள்ள எவர் கிவன் கப்பலின் அடிப் பகுதியிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எற்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜப்பான் நிறுவனத்துக்குச் சொந்தமான, பனாமா கொடியேற்றிய ‘எவர் கிவன்’ என்ற அந்தக் கப்பல், ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு சரக்குப் பெட்டகங்களை ஏற்றி சூயஸ் கால்வாய் வழியாக கடந்த வாரம் சென்றுகொண்டிருந்தபோது, திடீரென குறுக்கே திரும்பி பக்கவாட்டில் சிக்கிக் கொண்டது.

இதனால், உலகின் 12 சதவீத வர்த்தகத்துக்குப் பயன்படுத்தப்படும் அந்தக் கால்வாயில் போக்குவரத்து முடங்கியது. கடும் முயற்சிக்குப் பிறகு அந்தக் கப்பல் கடந்த திங்கட்கிழமை மணலில் இருந்து அகற்றப்பட்டு, போக்குவரத்து சரிசெய்யப்பட்டது.

# பிரான்ஸ் நாட்டில் ஒரு மாத காலத்திற்கு நாடளாவியரீதியில் ஊரடங்கு அறிவிப்பு



பிரான்ஸ் நாட்டில் பரவிய கொரோனா மூன்றாவது அலையை முறியடிக்க குறைந்தது ஒரு மாதத்திற்கு நாடு தழுவிய ஊரடங்கை அறிவித்துள்ளார் அதிபர் இமானுவல் மேக்ரன்.

மூன்று வாரங்களுக்குப் பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் உயிரிழப்பு எண்ணிக்கை ஒரு லட்சத்தை எட்டியுள்ளது. அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் பாதிக்கப்பட்ட மக்களால் நிரம்பி வழிகின்றன.தடுப்பூசி செலுத்தும் பணிகளும் மந்தகதியில் நடைபெறுகின்றன.

# பிரேஸிலில் முப்படை தளபதிகள் ஒரே நாளில் கூட்டாக ராஜினாமா



சீனாவில் தோன்றி உலக நாடுகளுக்கு பரவிய உயிர்கொல்லி கொரோனா வைரஸை கட்டுப்படுத்த உலக நாடுகள் கடந்த ஆண்டு தொடக்கத்தில் ஊரடங்கு கட்டுப்பாடுகளை அறிவித்தன.

தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றான பிரேசிஸின் அதிபர் ஜெயீர் போல்சனாரோ கொரோனா வைரசை சாதாரண காய்ச்சலுடன் ஒப்பிட்டு ஊரடங்கு கட்டுப்பாடுகளை விதிக்க மறுத்து விட்டார்.

இது அந்த நாட்டின் மீது கொரோனா வைரஸ் தனது கோரப்பிடியை இறுக்குவதற்கு வழி செய்தது. இதனால் உலக அளவில் கொரோனா வைரஸால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பிரேஸில் 2 ஆவது இடத்தில் உள்ளது.

அங்கு இந்த கொடிய வைரஸ் 3 லட்சத்து 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களை பறித்து உள்ளது. அதேபோல் 1 கோடியே 25 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாவால் உயிரிழந்தோரின் உடல்களை அடக்கம் செய்ய சவக்கிடங்குகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் வைத்தியசாலை வளாகங்களில் உடல்கள் கிடத்தப்பட்டு உள்ளன.

நோயாளிகளுக்கான ‘ஒக்சிஜன்’ கையிருப்பும் வெகுவாக குறைந்துவிட்டதாக வைத்தியசாலை நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன.

அதிபர் ஜெயீர் போல்சனாரோவின் அலட்சியப் போக்கே கொரோனா நெருக்கடிக்கு காரணம் என எதிர்க்கட்சிகளும், சுகாதார நிபுணர்களும் குற்றம் சாட்டுகின்றனர். இதனால் கடந்த ஓராண்டாக அவரது செல்வாக்கு கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த சூழலில் பிரேசிஸின் வெளியுறவு அமைச்சராக இருந்து வந்த எர்னஸ்டோ அராஜுவோவின் செயல்பாடுகளால் பிற நாடுகளிடமிருந்து கொரோனா தடுப்பூசியைப் பெற முடியாமல் போனது என கடுமையான விமர்சனங்கள் எழுந்ததை தொடர்ந்து அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

அதேபோல் அதிபர் ஜெயீர் போல்சனாரோவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இராணுவ அமைச்சர் பெர்னாண்டோ அசெவெடோ இ சில்வா பதவி விலகினார்.

இதனைத் தொடர்ந்து அதிபர் ஜெயீர் போல்சனாரோ தனது அமைச்சரவையை மாற்றி அமைக்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்.

அதன்படி வெளியுறவு, இராணுவம், உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் நீதி உள்பட 6 சக்தி வாய்ந்த துறைகளின் அமைச்சர்களை மாற்றிவிட்டு புதிய அமைச்சர்களை நியமித்தார்.

இந்த நிலையில் நாட்டின் தரை, வான் மற்றும் கப்பல் ஆகிய முப்படைகளும் தனிப்பட்ட முறையில் அவருக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென அதிபர் ஜெயீர் போல்சனாரோ தனக்கு அதிக அழுத் தம் கொடுத்ததாலேயே பதவியை இராஜினாமா செய்ததாக இராணுவ அமைச்சர் பெர்னாண்டோ அசெவெடோ இ சில்வா பரபரப்பு குற்றம் சாட்டினார்.

இது அந்த நாட்டு அரசியலில் மட்டுமின்றி ராணுவத்திலும் பெரும் புயலை கிளப்பியது.

இந்த நிலையில் அதிபர் ஜெயீர் போல்சனாரோ இராணுவத்தின் மீது தேவையற்ற கட்டுப்பாட்டைக் கொண்டுவர முயற்சிப்பதாக குற்றம் சாட்டி முப்படைகளின் தளபதிகள் ஒரேநாளில் தங்களது பதவியை ராஜினாமா செய்தனர்.

இராணுவத்தளபதி எட்சன் வீல் புஜோல், கப்பல்படை தளபதி ஆடம் இல்கஸ் பார்போசா மற்றும் விமானப்படைத் தளபதி அன்டோனியோ கார்லோஸ் பெர்முடெஸ் ஆகிய 3 பேரும் நேற்றுமுன்தினம் தங்களது பதவியை இராஜினாமா செய்தனர்.

பிரேஸில் வரலாற்றில் அதிபர் உடனான கருத்து வேறுபாட்டில் முப்படைகளின் தளபதிகள் ஒரே அணியில் நிற்பது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

இதனால் பதவிக்கு வந்த 2 ஆண்டுகளில் முதல் முறையாக அதிபர் ஜெயீர் போல்சனாரோ மிகப்பெரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்.

# ஜனவரியில் விபத்தில் சிக்கிய இந்தோனேசிய விமானத்தின் ஒலிப்பதிவுப் பெட்டி மீட்பு



கடந்த ஜனவரி மாதம் கடலில் விழுந்து நொருங்கிய இந்தோனேஸியாவின் ஸ்ரீவிஜயா ஏஷா விமானத்தின் விமானிகள் அறை ஒலிப் பதிவுப் பெட்டியை அந்த நாட்டுக் குழுவினா மீட்டுள்ளனர்.

இதுகுறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் புடிகாரியா சுமாடி புதன்கிழமை கூறியதாவது:

விபத்துக்குள்ளான ஸ்ரீவிஜயா ஏர் விமானத்தின் கறுப்புப் பெட்டிகளில் ஒன்றான விமானிகள் அறை ஒலிப்பதிவுப் பெட்டி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு மீட்கப்பட்டது.

விமானத்தின் இயக்கத் தகவல் பதிவுப் பெட்டி மீட்கப்பட்ட இடம் அருகே ஒலிப் பதிவுப் பெட்டியும் மீட்கப் பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஸ்ரீவிஜயா ஏஷா நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம், வந்தன் மாகாணம், தங்கராங் நகர விமான நிலையத்திலிருந்து கடந்த ஜனவரி மாதம் 9-ஆம் திகதி புறப்பட்ட 4 நிமிடங்களில் கடலுக்குள் வீழ்ந்தது.

இதில், அந்த விமானத்திலிருந்த 62 பேரும் உயிரிழந்தனர். விபத்து நேரிட்ட 3-ஆவது நாளில் விமான இயக்கப் பதிவுப் பெட்டி மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.



* ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
* வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.

077 652 9583

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வலிப்பு காரணமாக வயோதிபர் நீரினுள் விழுந்து மரணம்

வலிப்பு நோயாளி ஒருவர் ஆற்றோரமாக நடந்து செல்லும் போது வலிப்பு ஏற்பட்டு ஆற்று நீரினுள் விழுந்து நேற்று மாலை மரணமடைந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சித்தாண்டி முருகன் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை விநாயகம் (59) என்பவரே சந்தனமடு ஆற்றுப் பகுதியை அண்மித்த பகுதியில் தோட்டவேலைக்காக சென்றுவிட்டு நேற்று மதியவேளையில் தனது வீடு திரும்பு வதற்காக ஆற்றோரமாக நடந்து வரும் போது திடீரென வலிப்பு ஏற்பட்டதனால் ஆற்றுநீரில் விழுந்து மரணமடைந் துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

ஏறாவூர் சுற்றுலா பதில் நீதிமன்ற நீதிவான்அவர்களின்உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளைஏறாவூர்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் தொடர்ந்து அதிகரித்து வரும் டெங்கு



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்புத் தாக்கம் அதிகரித்து வருகின்றது அந்த வகையில் கடந்த 2021 மார்ச் 19ஆந் திகதி தொடக்கம். 2021 மார்ச் 26 ஆந் திகதி வரையும் 71பேர் டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்த வாரம் டெங்கு தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மட்டக்களப்பு 20 நோயாளர்களும், வாழைச்சேனை 12 நோயாளர்களும், காத்தான்குடி12 நோயாளர்களும், ஏறாவூர் 07 பேரும், செங்கலடி 6 நோயாளர்களும், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 நோயாளர்களும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் 3 பேரும் டெங்கு நோயாளர்களக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அது போன்று கோறளைப்பற்று மத்தி பிரிவில் 2 நோயாளர்களும், கிரான் 2 நோயாளர்களும், வவுணதீவு 1 நோயாளரும் மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். இருப்பினும் வாகரை, வெல்லாவெளி, பட்டிப்பளை, ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங் காணப்படவில்லை.

மேலும் கடந்த சில வாரங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயினால் எந்த ஒரு மரணங்களும் பதிவாகவில்லையென வைத்தியர் வே.குணராஜசேகரம் தெரிவித்தார். மொத்தமாக கடந்தவாரம் 20 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு தொற்றுக்கு ஆளாகியுள்ளதுடன் நாட்டில் பொதுவாக டெங்குநோய் பரவும் அபாயம் உள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன.

ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி பிரதேச மக்கள் சற்று விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கிகிடக்கின்ற குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்பரவாக வைத்துக் கொள்ளுமாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு பொறுப்பான வைத்திய கலாநிதி வே.குணராஜசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தங்கச் சங்கிலி அறுப்பு

மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் துவிச்சக்கரவண்டியில் சென்ற ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை மோட்டார்ச் சைக்கிளில் வந்த கொள்ளையர் அறுத்துச் சென்ற சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் சம்பவதினமன்று இரவு 10 மணியளவில் வேலை முடிந்து கிரானில் உள்ள தனது வீடு நோக்கி சைக்கிளில் பிரயாணித்த வேளையில் பின்னால் வந்த மோட்டர்சைக்கில் முன்னோக்கி சென்று பேச்சு கொடுத்து நிறுத்திய மறுகனம் குறித்த நபரின் கழுத்தில் இருந்த ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினையடுத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு பகுதில் அண்மைக்காலமாக வீதியில் பயணிக்கும் தங்க ஆபரணங்கள் அணிந்துசெல்லும்பெண்களை குறிவைத்து மோட்டர் சைக்கிளில் பின் தொடர்ந்து கொள்ளையிடும் சம்பவம் அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறும் இக் கொள்ளையர்கள் தொடர்பாக தக வல்கள் தெரிந்திருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் மட்டக்களப்பு பொலிஸார் பொது மக்களை கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிக்கள உத்தியோகத்தர்களின் உளநலத்தை முகாமை செய்ய விழிப்புணர்வு

காரைதீவு, ஏப். 01

காரைதீவு பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவின் ஏற்பாட்டில் கொவிட் 19 காலப்பகுதியில் வெளிக்களஉத்தியோகத்தர்களின் உளநலத்தை முகாமை செய்தல் தொடர்பான விழிப்புணர்வு ஒன்று இடம்பெற்றுள்ளது

காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் வளவாளராக டாக்டர் எம்.ஜே.நௌபல் கலந்து கொண்டு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர், கிராம நிலைதாரிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை மாவட்டத்துக்கு புதிய மேலதிக அரசாங்க அதிபர்

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் முதலாம்தர உத்தியோகத்தரான ஜே.எஸ்.அருள்ராஜ் தமது கடமைகளை இன்று மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர் 2003 ம்ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டார்.

கிண்ணியா,சேருவல பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும் முன்னர் இருந்த வடகிழக்கு மாகாண சபை மற்றும் கிழக்கு மாகாண சபை ஆகியவற்றிலும் கடமையாற்றியுள்ளார்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர், கிழக்கு மாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமையை பதவியேற்க முன்னர் இவர் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை வலயக் கல்வி அதிபர்களுக்கான செயலமர்வு

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள பாடசாலை அதிபர்களுக்கான நிதி முகாமைத்துவம், வருட இறுதி வரவு செலவுத் திட்ட அறிக்கை தயாரித்தல் சம்பந்தமாக தெளிவூட்டும் செயலமர்வு நேற்று கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் கல்விப் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு வளவாளராக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் வை.ஹபிபுல்லா கலந்து கொண்டு விளக்கவுரை வழங்கினார். நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் ஆகிய கோட்ட மட்டத்தில் உள்ள பாடசாலைகளை மையப் படுத்திய அதிபர்கள் மற்றும்துறைசார்ந்த உத்தியோகத்தர் என கலந்து கொண்டனர்.

# காணிகள் தொடர்பில் விழிப்புணர்வு சேவை



கோறளைப்பற்று வடக்கு வாகரை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள மக்களிடம் காணப்படும் காணி சம்பந்தமான பிணக்குகளை சுமுகமாகவும் விரைவாகவும் தீர்ப்பதற்கான திட்டத்தினை நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியத்தின் நிதி அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்ட விசேட காணி மத்தியஸ்த சபையுடன் இணைந்து LIFT நிறுவனம் செயற்படுத்துகிறது.

இத்திட்டத்தின் தொடர் செயற்பாடாக கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பனிச்சங்கேணி கிராம சேவகர் காரியாலயத்தின் மண்டபத்தில் காணி பிணக்குகள் தொடர்பான விழிப்புணர்வுடன் நடமாடும் சேவையும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட காணி விசேட மத்தியஸ்த சபையின் தவிசாளர் கதிர்காமத்தம்பி குருநாதன் மற்றும் காணி விசேட மத்தியஸ்த சபையின் உறுப்பினரான பஸ்தியாம்பிள்ளை ஆகியோர் மக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்கினார்கள்.

# மட்டக்களப்பு மாவட்ட பல் சமய ஒன்றியத்தின் இவ்வாண்டிற்கான முதல் விசேட ஒன்று கூடல்



மட்டக்களப்பு மாவட்ட ஹரிதாஸ் எகட் நிறுவனத்தின் அனுசரனையுடன் இயங்கிவரும் பல் சமய ஒன்றியத்தின் இவ்வாண்டிற்கான முதலாவது ஒன்று கூடல் மட்டக்களப்பு மாவட்ட ஹரிதாஸ் எகட் நிறுவனத்தின் தலைவர் அருட்பணி அ.இயேசுதாசன் தலைமையில் மட்டக்களப்பு அமெரிக்க மின் மண்டபத்தில் நேற்று புதன்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

பல்சமய ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ.கே.சிவபாலன் குருக்கள் வரவேற்புரையுடன் ஆரம்பமான ஒன்று கூடலில் பல்சமய ஒன்றியத்தின் உப தலைவர்களான ஜனாப் இக்பால், ஜோன் யோசப் மேரி அடிகளார், பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை ரொகான் ராஜன் உட்பட அருட்தந்தையர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அடங்களாக பல்சமய ஒன்றியத்தின் ஆரையம்பதி, காத்தான்குடி - கல்லடி, மண்முனை வடக்கு, ஏறாவூர் - செங்கலடி, ஓட்டமாவடி - வாழைச்சேனை ஆகிய கிளைகளின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இவ்வாண்டிற்கான நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டதுடன், கடந்த காலங்களில் மேற்கொள் ளப்பட்ட செயற்திட்டங்கள், எதிர்காலத்தில் மேற்கொள்ள வுள்ள கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக ஒற்றுமைச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# போதைப் பொருள் பாவனையினைத் தடுக்க விழிப்புணர்வு

மட்டக்களப்பு, ஏப்ரல் 01

'போதையற்ற நாடு சௌபாக்கியமான தேசம்' எனும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்பில் போதைப் பொருள் பாவனையினைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் களுவாஞ்சிக்குடி, காத்தான் குடி பிரதேச செயலக பிரிவுகளில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் நாடுபூராகவும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது .

# கரையோர கண்டல் தாவர மர நடுகை

தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் தேசிய வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் மரக்கன்றுகளை நாட்டும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட சூழலியல்நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகளில் மரக்கன்றுகளை நாட்டும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதற்கு இணையாக மட்டக்களப்பு ஊறணி வாவிக்கரை பகுதிகளில் கண்டல் தாவரம் நாட்டும் நிகழ்வானது சூழலியல் நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் கிழக்கு மாகாணத்திற்கான தலைவர் கே.முத்துலிங்கம் தலைமையில்நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் மூன்றாம்நாள் முடிவில் இலங்கை அணி 250/8

இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி நேற்றைய ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி, 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 250 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், பெத்தும் நிஸங்க 49 ஓட்டங்களுடனும் லசித் எம்புல்தெனிய ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் களத்தில் இருந்தனர்.

இதற்கமைய மேற்கிந்திய தீவுகள் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை அணி 104 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

ஆண்டிகுவா மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 354 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிரைஜ் பிரத்வெயிட் 126 ஓட்டங்களையும் ராகிம் கோர்ன்வோல் 73 ஓட்டங்களையும் மேயர்ஸ் 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், சுரங்க லக்மால் 4 விக்கெட்டுக்களையும் துஷ்மந்த சமீர 3 விக்கெட்டுக்களையும் விஷ்வ பெனார்டோ, லசித் எம்புல்தெனிய, மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில், 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 250 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இலங்கை அணி சார்பில், அதிகபட்சமாக லஹிரு திரிமன்னே 55 ஓட்டங்களையும் தினேஷ் சந்திமால் 44 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 39 ஓட்டங்களையும்பெற்று ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அல்சார்ரி ஜோசப் மற்றும் ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கெமார் ரோச், செனோன் கெப்ரியல், கெய்ல் மேயர்ஸ் மற்றும் ஜெரமைன் பிளக்வுட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

முதலாவது இன்னிங்சில் மேற்கிந்தியதீவுகள் அணியை விட 104 ஓட்டங்கள் பின்னணியில் உள்ள இலங்கை இன்னமும் 2 விக்கெட்டுக்களை மட்டுமே வசமுள்ள நிலையில், போட்டியின் நான்காவது நாளை, இலங்கை அணி இன்று தொடரவுள்ளது.

# வலைப்பயிற்சியில் சிக்ஸர்களை விளாசிய புஜாரா!



இந்திய டெஸ்ட் அணியின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரான புஜாரா, முதல்முறையாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக ஐ.பி.எல். தொடரில் விளையாடவுள்ளார். இதற்காக மும்பையில் அணியினருடன் அவர் பயிற்சியை தொடங்கியுள்ளார்.

இந்நிலையில் வலைப்பயிற்சியின் போதுபுஜாராபந்துகளைசிக்ஸர்களுக்கு பறக்கவிட்ட வீடியோ வைரலாகி வருகிறது.

டெஸ்ட்போட்டிகளில்மிகவும்நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தும் புஜாரா எப்படி இருபதுக்கு இருபது தொடரில் விளையாடுவார் என்று ரசிகர்கள் மத்தியில் ஆர்வம் இருந்தது. இப்போது புஜாரா பந்துகளை சிக்ஸர்களுக்கு தெறிக்கவிடும் வீடியோ ரசிகர்களின் கேள்விகளுக்குப் பதிலாகியுள்ளது.

இதுகுறித்து புஜாரா கூறுகையில், ‘‘களத்தில் நிற்பதை மகிழ்ச்சியாக உணர்கிறேன். மஞ்சள் ஜெர்ஸி அணிந்து விளையாடும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்” - என்றார்.

இந்த முகாமில் சி.எஸ்.கே. கப்டன் தோனி, ருதுராஜ், ராயுடு, புஜாரா உள்ளிட்டவர்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். தனது உடல் தகுதியை நிரூபித்து அணியில் இணைந்துள்ள ரவீந்திர ஜடேஜா, 7 நாள்கள் தனிமைப் படுத்தலின் பின் பயிற்சி முகாம்களில் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கலாம்.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த முக்கிய தொடக்க ஆட்டக்காரர் ராபின் உத்தப்பா, சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு மாற்றப்பட்டார். புஜாராவுடன், ராபின் உத்தப்பா, கே கவுதம் ஆகியோரும் மும்பையில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.



# சன்ரைசர்ஸ் அணியில் ஜேசன் ராய்

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் ஆஸ்திரேலிய வீரர் மிட்செல் மார்ஷுக்குப் பதிலாக இங்கிலாந்து வீரர் ஜேசன் ராய் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மிட்செல் மார்ஷ் கடந்த ஐ.பி.எல். சீசனில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக களமிறங்கினார். ஆனால், காயம் காரணமாக தொடரிலிருந்து அவர் வெளியேறினார். இந்த நிலையில், நடப்பு ஐபிஎல் சீசனிலிருந்து விலகுவதாக மார்ஷ் நேற்று (புதன்கிழமை) அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து, அவருக்குப் பதிலாக இங்கிலாந்து தொடக்க ஆட்டக்காரர் ஜேசன் ராய் மாற்று வீரராக சேர்க்கப்பட்டுள்ளார். அடிப்படை விலையான ரூ. 2 கோடிக்கு ராய் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் ராய் சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## மியாமி பகிரங்க டென்னிஸ்:

# ஸ்விடோலினா அரையிறுதிக்கு முன்னேற்றம்

மியாமி பகிரங்க டென்னிஸ் தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதி போட்டியில் வென்று உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்விடோலினா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற காலிறுதி போட்டி ஒன்றில் லிட்வியா வீராங்கனை செவஸ்டோவாவை எதிர்த்து எலினா ஸ்விடோலினா களமிறங்கினார்.

போட்டியின் ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடிய எலினா ஸ்விடோலினா 6 – 3 , 6 – 2 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.


இந்நிலையில் நாளைய தினம் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் ஆஸ்ரேலிய வீராங்கனை ஆஷ்லே பார்டியை எதிர்கொள்ளவுள்ளார்.

இதேவேளை இன்று நடைபெறவுள்ள மற்றுமொரு காலிறுதி போட்டியில் மரியா சக்கரியும் உலகின் முதல்நிலை வீராங்கனை நவோமி ஒசாகவும் பலப்பரீட்சை நடத்தவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் விடுதலைக்காக துணிவுடன் செயற்பட்ட ஆயர்!



ஈழத்தமிழர்கள் அனைவரது மனதிலும் நீங்காத இடம் பிடித்த மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தனது 80 வயதில் இன்று காலை 06.30 மணிக்கு இயற்கை எய்தினார்.

இவர் ஆயர் பணியில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கிறார். இவர் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக 1992ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஆயர் 16.04.1940 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நெடுந்தீவில் பிறந்தார். நெடுந்தீவு றோ.க. பாடசாலை, முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தார்.

கண்டி தேசிய குருமடம், திருச்சி புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று 13.12.1967ஆம் ஆண்டு முன்னாள் யாழ். ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையினால் யாழ். மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி முன்னாள் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்றார். 1992ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை உட்பட இலங்கையின் ஏனைய ஆயர்கள் புடைசூழ மருதமடு அன்னை ஆலயத்தில் ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார்.

ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மறைமாவட்டம் மட்டிலான தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றி வந்தார். திருப்பலி, திருவிழாக்கள், பங்குத்தரிசிப்புக்கள், ஆலோசனைகள், கூட்டங்கள், மாநாடுகள், ஆலய மற்றும் பங்குமனைக் கட்டுமானங்கள், ஏழைகளுக்கான உதவிகள் என அவர் தன் கடமைகளை மேற்கொண்டு வந்தார்.

பம்மைமடுவில் அன்னை திரேசாவின் அருட்சகோதரிகளை வரவழைத்து முதியோர் மற்றும் கைவிடப்பட்டவர்களைப் பராமரிக்க ஒரு இல்லத்தை ஆரம்பித்தார்.

முருங்கனில் டொன் பொஸ்கோ குருக்களை வரவழைத்து இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகளை வழங்க ஆவன செய்தார். அடம்பனில் இயேசு சபைக் குருக்களை வரவழைத்து அவர்களின் பணி மறைமாவட்டத்திற்கு கிடைக்க வழிசெய்தார்.

### துன்புற்ற மக்களின் துயர் துடைத்தார்

ஒரு கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்துநின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க அவர் அரும்பாடுபட்டார்.

சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை அவர் அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர்களோடு தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருந்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பாக நின்று அவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களின் கதியை வெளிக்கொணர ஓயாது உழைத்தார்.

யுத்தத்தால் தமது இல்லிடங்களை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டார். முள்ளிக்குளத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும், விடத்தல்தீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் அவர் காணிகளை, வீடுகளை வழங்கியமை இதற்கு உதாரணமாகும்.

யுத்தத்தால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு வாழ்வோதய நிறுவனத்தின் உதவிக்கரம் பிரிவு மூலம் உதவிகளைப் புரிந்தார். வவுனியா பம்மைமடுவில் அமைந்துள்ள வரோட் நிறுவனத்தின் ஊடாகவும் இவர்களின் புனர்வாழ்வுக்காகப் பாடுபட்டார்.

யுத்தத்தாலும், சுனாமியினாலும் பெற்றோரை இழந்து ஆதரவற்று நின்ற பெண் சிறார்களுக்கு வவுனியாவில் சலேசிய அருட்சகோதரிகளின் பராமரிப்பில் இல்லத்தை ஆரம்பித்தார். அதே போல் மன்னாரிலும் ஆண் சிறார்களுக்கான ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். இவ்வாறு இன்னும் பல துயர்துடைப்புப் பணிகளை முன்னெடுத்தார்.

2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி பேசாலையில் கடற்படையினருக்கு எதிராக இடம்பெற்ற தாக்குதலின்போது இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் பேசாலை புனித வெற்றிநாயகி அன்னை ஆலயத்தில் அடைக்கலம் புகுந்திருந்தனர்.

ஆலயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டு கடற்படையினர் செல்கின்ற செய்தியை அறிந்த ஆயர் ஆபத்தான அந்தச் சூழ்நிலையில் அன்றைய மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் சகிதம் பேசாலைக்கு சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். இச்சம்பவம் தொடர்பில் வத்திக்கானுக்கு தகவல்களை அனுப்பினார்.

2007ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி இலுப்பைக்கடவை படகுத்துறைப் பகுதியில் விமானக் குண்டுத்தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட 13 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டபோது அந்தத் தாக்குதல் நடந்த சில மணித்தியாலங்களில் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாருடன் அந்த இடத்திற்குச் சென்று அம் மக்களின் துயரத்தில் பங்குகொண்டதோடு கொல்லப்பட்டவர்கள் கடற்புலிகள் என்ற அரசின் செய்தியை மறுத்து பொதுமக்கள்தான் கொல்லப்பட்டனர் என்ற செய்தியை உலகத்திற்குத் தெரியப்படுத்தினார்.

மன்னாரில் 2011 ஜனவரியில் இடம்பெற்ற எல்.எல்.ஆர்.சி. அமர்வில் ஆயர் ஏனைய குருக்களோடு இணைந்து மக்களின் பிரச்சினைகளை எழுத்து மூலமாக அறிக்கையாக முன்வைத்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள், தடுத்துவைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்க சந்தேக நபர்கள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், போரினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு போன்ற உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய பல விடயங்கள் மற்றும் அரசியல் தீர்வின் அவசியம் போன்ற விடயங்களை அவர் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

வன்னியில் இருந்த மக்களில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேருக்கு என்ன நடந்தது? என்ற கேள்வியைக் கேட்டு அரசை ஆட்டம்காணச் செய்தார்.

ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையாக வாழும் போதும், உயிர்நீத்த பின்னரும் முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை இருப்பார் என்பது பொதுவான கருத்தாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கண்டனங்களுக்கு ஆயரின் விளக்கம்

2012ஆம் ஆண்டு 'லக்பிம' என்ற சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தன்னைப்பற்றிய பல விமர்சனங்களுக்கு அவர் பதில் அளித்திருந்தார்.

'நீங்கள் சர்ச்சைக்குரிய ஆயர் என அழைக்கப்படுகின்றீர்கள். இதுபற்றிய உங்கள் விளக்கம் என்ன?' என்ற கேள்விக்கு அவருடைய பதில், நான் சர்ச்சைக்குரிய ஆயர் என அழைக்கப்படுகின்றேன். ஏனென்றால் சர்ச்சைக்குரிய விடயங்கள் நடைபெறுகின்றன. நான் அந்த விடயங்கள் பற்றிப் பேசும் போது சர்ச்சைக்குரிய ஆளாக மாறுகின்றேன்.

நான் உண்மையைப் பேசுவதால் வெளிப்படையாகப் பேசும் ஆயர் என்கின்றனர். நான் ஏழைகள் மேல் கரிசனை கொண்டு நீதிக்காகக் குரல் கொடுத்தால் நான் இலங்கைக்கு எதிரானவன், புலிகள் அல்லது பிரிவினைவாதி என்கின்றனர். இப்பெயர்களைப்பற்றி நான் அலட்டிக்கொள்வது இல்லை. நான் தொடர்ந்தும் அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்புவேன். மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவேன்.

> நான் உண்மையைப் பேசுவதால் வெளிப்படையாகப் பேசும் ஆயர் என்கின்றனர். நான் ஏழைகள் மேல் கரிசனை கொண்டு நீதிக்காகக் குரல் கொடுத்தால் நான் இலங்கைக்கு எதிரானவன், புலிகள் அல்லது பிரிவினைவாதி என்கின்றனர். இப்பெயர்களைப்பற்றி நான் அலட்டிக்கொள்வது இல்லை. நான் தொடர்ந்தும் அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்புவேன். மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவேன்.

'நீங்கள் விடுதலைப் புலியா? அல்லது அந்த அமைப்பின் தீவிர ஆதரவாளரா?' என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில், நான் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறேன் என்பது எனக்குத் தெரியாது. என்னை அப்படி அழைப்பது அவர்களின் பலவீனம்.

நான் விடுதலைப் புலிகளின் சில செயற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அவற்றை கண்டித்திருக்கிறேன்.

ஒரு குரு என்ற வகையில், உண்மையையும், வாழ்வையும், வழியையும் வெளிப்படுத்தி வன்முறைக்குப் பலியான இயேசுவை பின்பற்றுகிறவன் என்ற வகையில் நான் எனது கடமைகளைச் செய்கின்றேன்.

### பணி ஓய்வு

1992ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அவர் சுகவீனமடையும்வரை இடைவிடாமல் தொடர்ச்சியாக இயங்கி வந்தார். திருச்சபையின் ஒழுங்குவிதிக்கு அமைய 75 வயது நிறைவில் தான் பணியிலிருந்து ஓய்வுபெறுவதாக திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1 இற்கு அமைவாக பாப்பரசர் பிரான்சிஸிஸ் அறிவித்தார். 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி இவருடைய பணி ஓய்வுக்கான கோரிக்கையை பாப்பரசர் ஏற்றுக்கொண்டார்.

2014ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் நிறைவுநாள் நிகழ்வின்போது மன்னார் தமிழ்ச் சங்கம் 'இனமான ஏந்தல்' என்ற விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. 2015ஆம் ஆண்டு கொழும்புக் கம்பன் கழகம் இவருக்கு 'கம்பன் புகழ்' விருதினை வழங்கிக் கௌரவித்தது.



குறிப்பாக ஈழத்துத் திருச்சபையின் பணியாளர்கள் ஆயரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற விளைய வேண்டும். காலத்தின் தேவைக்கு ஏற்ப துணிவோடு, உறுதியோடு செயலாற்ற வேண்டும். ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகையின் வாழ்வும் பணிகளும் இன்றைய, நாளைய தலத்திருச்சபைக்கு சவாலாக, விழிப்புணர்வாக, உந்துதலாக அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சனுக்கு நியாயம் வழங்கக்கோரி தனிநபர் பிரேரணை சமர்ப்பிப்பேன்

## சுமந்திரனுக்கும் அக்கறை இல்லை என்கிறார் அரச அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே

சிறைத் தண்டனை அனுபவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நியாயம் வழங்குமாறு ஆளும் தரப்பின் சார்பில் தனிநபர் பிரேரணையை கொண்டு வர எதிர்பார்த்துள்ளேன். ரஞ்சன் ராமநாயக்கவைப் பாதுகாக்கும் நோக்கம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கும் இருக்கவில்லை என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

நல்லாட்சி அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த ரஞ்சன் ராமநாயக்க 2016 ஜூன் 16 ஆம் திகதி எனக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அவரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டால் உளவியல் ரீதியிலும், சமூதாய ரீதியிலும் பெரிதும் பாதிக்கப்பட்டேன். 50 கோடி ரூபா நஷ்டஈடு கோரி நுகேகொடை நீதிமன்றில் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தேன்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் சுய தேவைக்காக இவர் பயன்படுத்திக் கொள்ளப்பட்டார். குறிப்பிட்ட ஒரு தரப்பினர் தங்களின் சுய தேவைக்காக இவரைத் தவறாக வழி நடத்தினார்கள். நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக இவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது அவர் செய்த தவறுகளை உணர்ந்து உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராக நான் தாக்கல் செய்த வழக்கு நிறைவு பெறும் தருவாயில் உள்ளது. என்மீது ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் போலியானவை என்பதால் அவருக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும். எனவே தற்போது அவர் அனுபவிக்கும் சிறைத் தண்டனை இரட்டிப்பாகும்.

எனினும் என்மீது சுமத்திய பொய்யான குற்றச்சாட்டு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன்



ராமநாயக்க நீதிமன்றில் கவலையை வெளியிட்டார். தவறை உணர்ந்ததால் அவருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கை மீளப் பெற்றுக் கொண்டு அவருக்கு மன்னிப்பு வழங்கினேன். அரசியலில் பழிவாங்க வேண்டிய தேவை கிடையாது. நல்லாட்சி அரசாங்கத்தில் எனக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களை இவரே முன்வைத்தார். இதனை கொண்டு தற்போது பழிவாங்க வேண்டிய தேவை கிடையாது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 103 சாட்சியாளர்கள் இருந்தார்கள். இவருக்கு சார்பாக நீதிமன்றில் முன்னிலையான நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் 3 சாட்சியங்களை மாத்திரம் பரிசீலித்தார். அனைத்து சாட்சியங்கள் குறித்தும் அவதானம் செலுத்தியிருந்தால் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நியாயம் வழங்கப்பட்டிருக்கும்.

ஜெனிவா விவகாரத்தில் இந்த விடயங்களைக் காண்பித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தொடர்பில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கும் நோக்கம் அவருக்கு காணப்பட்டது. இன்று இவ்விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கவலையடைகிறார். இவருக்கு நியாயம் வழங்க ஆளும் தரப்பு சார்பில் நாடாளுமன்றில் தனிநபர் பிரேரணையை முன்வைக்க எதிர்பார்த்துள்ளேன்.

# அரசிடம் இராஜதந்திர நகர்வு இல்லை இலங்கையின் நற்பெயருக்கு இழுக்கு!

## முஜிபுர் ரஹ்மான் வேதனை



அரசாங்கத்திடம் இராஜதந்திர அணுகுமுறைகள் இன்மையால் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு காணப்பட்ட நற்பெயருக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்போதைய அரசாங்கத்தைப் போன்று சர்வாதிகாரப் போக்குடைய சில நாடுகள் மாத்திரமே இலங்கையுடன் இணைந்து செயற்படுகின்றன.

ஏனைய சகல நாடுகளும் எம்மை விட்டு விலகியுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை வெற்றிகொள்ள முடியாமல் போனமை அரசாங்கத்தின் பலவீனமாகும்.

இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட இலங்கையின் நட்பு நாடுகள் கூட இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை.

குறிப்பாக ஜப்பான் எவ்வித எதிர்பார்ப்புக்களும் இன்றி இலங்கைக்கு உதவிய நாடாகும். எனினும் இம்முறை அதன் ஆதரவைக் கூட தக்க வைத்துக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளமை கவலைக்குரியது.

அரசாங்கத்திடம் இராஜதந்திர அணுகுமுறைகள் இன்மை மற்றும் சர்வதேசத்துடனான இணக்கம் இன்மை என்பவற்றால் இலங்கையின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல நாடுகள் எம்மிலிருந்து விலகியுள்ளன. தற்போதைய அரசாங்கத்தைப் போன்று சர்வாதிகார சிந்தனையுடைய நாடுகள் மாத்திரமே எம்முடன் உள்ளன.

நாம் உலக நாடுகளுடன் இணைந்து முன்னோக்கிச் செல்லப் போகின்றோமா அல்லது தென் ஆபிரிக்காவைப் போன்று பழைமையான ஆட்சியை நோக்கி செல்லப் போகின்றோமா? உலக நாடுகளுடன் இணைந்து பயணிப்பதில் இலங்கை தோல்வியடைந்துள்ளது.

இந்த விடயத்திலும் அரசியல் கருத்துக்களைக் கூறிக் கொண்டு போலியான விடயங்களால் மக்களை ஏமாற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது.

ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றமை கவலைக்குரியதாகும்.– என்றார்.

# ஷானி அபேசேகர உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட மூவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த மூவரையும் எதிர்வரும் ஏப்ரல் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) உத்தரவு பிறப்பித்துள்ளது. ஷானி அபேசேகர உள்ளிட்ட மூவரும் போலி சாட்சியங்களை உருவாக்கிய குற்றச்சாட்டில், கடந்த வருடம் ஜுலை 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரவிகருணாநாயக்க உள்ளிட்ட ஏழு பேருக்குப் பிணை

2016 ஆம் ஆண்டின் மத்திய வங்கி பிணை மோசடி வழக்கிலிருந்து முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி ரவி கருணாநாயக்கவுக்கும் ஏனைய ஆறு பேருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியது.

மத்திய வங்கி பிணை மோசடி நடவடிக்கை ஒன்றூடாக அரசாங்கத்துக்கு 1,500 கோடி ரூபா நட்டம் ஏற்படுத்திய விவகாரம் தொடர்பிலான வழக்கில் ரவி கருணாநாயக்க கடந்த மார்ச் 17 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

2016 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி மத்திய வங்கியின் முறிகள் ஏலத்தின் போது இடம்பெற்ற மோசடி தொடர்பில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட ஏனையவர்களுக்கு மீது குற்றம் சாட்டப்பட்டது.

# தீவிரவாத கருத்துக்கள் பரப்பியமை; நால்வர் கைது

தீவிரவாதக் கருத்துக்களை பரப்பிய குற்றச்சாட்டில் நால்வரை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

அவர்களில் இருவர் கொழும்பிலும், மற்றைய இருவரும் மூதூரிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரானின் கருத்துக்களை சமூக ஊடகங்களில் பரப்பினர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## 1,000 ரூபா சம்பள விவகாரம்:

# வர்த்தமானிக்கு இடைக்கால தடை; முடிவு இந்த மாதம் 5 ஆம் திகதி

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை 1,000 ரூபாவாக நிர்ணயம் செய்து வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானிக்கு, பெருந்தோட்டக்கம்பனிகள் கோரும் இடைக்கால தடையுத்தரவை விதிப்பதா, இல்லையா என்பது தொடர்பிலான உத்தரவை எதிர்வரும் 05 ஆம் திகதி அறிவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

அத்துடன் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் பிறப்பிப்பது தொடர்பிலான தீர்மான உத்தரவும் அன்றைய தினத்தில் அறிவிக்கப்படும் என மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை 1,000 ரூபாவாக அதிகரித்து அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானியை வலு இழக்கச் செய்யும் வகையில் எழுத்தாணை ஒன்றைப் பிறப்பிக்கக் கோரி 20 பெருந்தோட்டக் கம்பனிகள் தாக்கல் செய்த ரிட் மனு நேற்று பரிசீலிக்கப்பட்ட போதே இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

குறித்த ரிட் மனு நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் நீதிபதி மாயதுன்ன கொரயா ஆகியோர் அடங்கிய இருவர் கொண்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, மன்றில் பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் சுசந்த பாலபட்டபெந்திகே, குறித்த ரிட் மனுவை விசாரணைக்கு ஏற்கக் கூடாது என நீதிமன்றைக் கோரினார்.

பல வருடங்களாகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கையை ஆராய்ந்த அரசாங்கம், அவர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளதால், மனுதாரர்களின் கோரிக்கையை நிராகரித்து, அந்த மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்யுமாறு மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் சுசந்த பாலபட்டபெந்திகே மன்றைக் கோரினார்.

இந் நிலையிலேயே மனுதாரர் தரப்பின் கோரிக்கைக்கு அமைய அவர்கள் கோரும் இடைக்காலத் தடை உத்தரவை வழங்கி வழக்கை விசாரணைக்கு ஏற்பதா, பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புவதா உள்ளிட்ட விடயங்களை எதிர்வரும் 5 ஆம் திகதி அறிவிப்பதாக மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

முன்னதாக அக்கரப்பத்தனை பெருந்தோட்டக் கம்பனி, எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி உள்ளிட்ட 20 கம்பனிகள், கடந்த 12 ஆம் திகதி, மேன் முறையீட்டு நீதிமன்றில் இந்த ரிட் மனுவைத் தாக்கல் செய்திருந்தன.

குறித்த மனுவில் பிரதிவாதிகளாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தொழிலாளர் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்ர கீர்த்தி, தேயிலை தொழிற் துறை சம்பள நிர்ணய சபையின் தலைவர் உள்ளிட்ட 18 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டிருந்தனர்.

அண்மையில் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளம் 1,000 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை 1,000 ரூபாவாக நிர்ணயிக்க சம்பள நிர்ணய சபையூடாக அனுமதி பெறுவது தொடர்பாக வரவு செலவுத் திட்டத்திலும் உள்வாங்கப்பட்டிருந்ததாக மனுதாரர்கள் தமது ரிட் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்களான பெருந்தோட்ட நிறுவனங்கள், திடீரென தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு, பெருந்தோட்ட தொழிற் துறையையே பிரச்சினைக்குள் தள்ளும் செயல் என மனுவூடாகக் கூறியுள்ளனர்.

மனுதாரர்களான, தாம் (பெருந்தோட்டக் கம்பனிகள்) அரசுக்கு பாரிய தொகை வரியைச் செலுத்தும் நிலையில், இந்த சம்பள அதிகரிப்பு ஊடாக கம்பனிகள் பாரிய சிக்கலை எதிர்கொள்ள நேரிடும் எனவும் மனுவில் கூறியுள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் தமது மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளவர்களுக்கு நீதிமன்றில் ஆஜராக அறிவித்தல் விடுக்குமாறும், தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படைச் சம்பளமாக 1,000 ரூபாவை நிர்ணயம் செய்துள்ள வர்த்தமானி அறிவித்தலை வலு இழக்கச் செய்து எழுத்தாணை ஒன்றைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org